சுகாதார முறைமை மேம்படுத்தல் செயற்திட்டம் - மேலதிக நிதியளிப்பின் 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2021 ஒக்தோபர ் 07 ஆம் திகதிய எல் - 4121-எஸ்ஆர்ஜ ஆம் இலக்க மற்றும் ஜீ9222-எஸ்ஆர்ஜ ஆம் இலக்க கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளில் உள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியிடல் மற்றும் காலப்பகுதி

கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளின் பிரகாரம், சுகாதார அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் மத்திய, வட மத்திய, சப்ரகமுவ மற்றும் ஊவா மாகாணங்களின் நான்கு மாகாண சபைகள் அமுலாக்கல் முகவர்களாக உள்ளன. தற்போதைய மூன்றாவது அலையான கொவிட் - 19 தொற்றுநோய் முகாமைத்துவம் காரணமாக மூல செயற்திட்டத்தின் மூல நோக்கெல்லையை அமுல்படுத்தி, மேலும் அதிகரித்து வரும் கோரிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு மேற்படி மீள்ஒதுக்கீடு காரணமாக ஏற்பட்ட நிதி பற்றாக்குறையை எதிர்கொள்ளுதல், கொத்தணி உச்ச மருத்துவமனைகளாக உருவாக்கப்படும் ஆரம்ப ஒன்பது செயற்திட்ட மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் குறைந்தபட்சம் ஒரு இரண்டாம் நிலை சிகிச்சை வசதியை (கொவிட்-19 விடய முகாமைத்துவத்திற்கானது உட்பட) உருவாக்குவதற்கு ஆதரவளித்தல், நாட்டில் அதிகரித்து வரும் கொவிட்-19 நிலைமையைக் கருத்தில் கொண்டு தொலைதூர மற்றும் மின்- கற்றலுக்கான வசதிகளை விரிவுபடுத்துதல், அளவிடப்பட்ட செயற்திட்டங்களின் விளைவுகளை வெற்றிகரமாக அமுல்ப்படுத்தி அடைந்துகொள்வதற்காக செயற்திட்ட இறுதித் திகதியை 24 மாதங்களால் அல்லது 2025 நவம்பர் வரை நீடித்தல் மற்றும் கொவிட்-19 தொடர்பான நிதி இடைவெளிகளை எதிர்கொள்வதற்கு ஐ.அ.டொலர் 3 மில்லியன் மானியத்தை வழங்குவதற்காக ஜப்பான் நிதிய வறுமைக் குறைப்பை அணுகுதல் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 24,538.5 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 123 மில்லியன் தொகையானதுடன் அதில் ரூபா 22,543.5 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 113 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு இணங்கப்பட்டது. ரூபா 1,995.0 மில்லியன் மிகுதி தொகை இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2021 நவம்பர் 17 இல் தொடங்கியிருந்ததுடன் 2025 நவம்பர் 30 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினக் கூற்றினையும் அதன் காசுப்பாய்ச்சல்களையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை

நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2 பௌதீக செயலாற்றல்

### 2.1 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| பின்னோக்கிச் செயல்படும் நிதி வசதியின் கீழ் செயற்திட்ட நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்தி ரூபா 2,523.3 மில்லியன் மதிப்புள்ள மருத்துவ உபகரணங்கள் பெறப்பட்டிருந்தாலும், இந்த மருத்துவ உபகரணங்களை வழங்கிய நிறுவனங்கள் தொடர்பான தகவல்களும், இந்த சொத்துக்களை அமைச்சு அல்லது தொடர்புடைய நிறுவனங்களின் நிதி அல்லாத சொத்துக்களாகக் கணக்கிடுவது தொடர்பான ஆதாரங்களும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | பொருட்கள் உயிர்மருத்துவம் பொறியியல் பிரிவால் பெறப்பட்டதுடன் பெறப்பட்ட பொருட்கள் முறையாக வழங்கப்பட்டதுடன் உயிர்மருத்துவம் பொறியியல் சேவைகள் பிரிவால் இருப்பு பதிவேடுகள் புதுப்பிக்கப்பட்டன. இந்த மதிப்புகளை எங்கள் செயற்திட்ட நிதி அறிக்கைகள் மற்றும் சொத்து பதிவேட்டில் சேர்த்துள்ளோம். | மருத்துவ உபகரணங்கள் வழங்கும் கட்டளைகளின் துல்லியத்தை சரிபார்க்க கணக்காய்வுக்கு சமர்ப்பிக்க வேண்டும். |